**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**
**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**MCOP.No:** 45/2024 நாள் 16.09.2025

ம.சா.1, திரு.ராஜேந்திரன்

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்து சமயத்தில் என் மகன் இ.இ.இ பாலிடெக்னிக் படிப்பை படித்துக்கொண்டிருந்தார். அவர் மூன்றாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து சம்மந்தமாக நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். விபத்து சம்மந்தமாக கல்லூரியில் இருந்து எனக்கு தகவல் சொன்னார்கள். விபத்து நடந்த இடமானது ஆமத்தூர் பஸ் நிறுத்தம் ஆகும். என் மகன் எதிர்மனுதாரரின் போக்குவரத்து கழக வாகனத்தில் முன் படிக்கட்டில் இருந்து பயணம் செய்தார் என்றால் அப்படியில்லை. என் மகன் பேருந்தின் முன்படிக்கட்டில் நின்று பயணம் செய்தவரை பேருந்து ஓட்டுநரும் நடத்தனரும் என் மகனை பேருந்துக்குள் வரும்படி அழைத்தும் என் மகன் வரவில்லை என்றால் அப்படியில்லை. இந்த வாகன விபத்தை என் மகன் தான் வரவழைத்துக்கொண்டார் என்றும் இந்த வாகன விபத்திற்கு எதிர்மனுதாரரின் ஓட்டுநர் காரணமால்ல என்று சொன்னால் அது சரியல்ல. என் மகன் விபத்து சமயத்தில் பாலிடெக்னிக் கல்லூரியில் படித்து வந்ததால் எங்களுக்கு எந்தவிதமான வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. என் மகனுக்கு விபத்து சமயத்தில் வருமானம் இருப்பதாக சொல்லி அதிக இழப்பீடு கோரி இம்மனுவைதாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல. நாங்கள் கோரியுள்ள விபத்து இழப்பீடு தொகை அதிகாமானது என்றும் அதை இந்த எதிர்மனுதாரர் நிறுவனம் செலுத்தவேண்டியது இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 16th day of September 2025

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.